197

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம மார்கழி. [இதழ் க.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வேல்க!
இமிழ்முர செழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

ஆசை யனைத்தும் நிறைதரமால்
அடுத்து வரவா லறிவுறலால்
அணியா ரணியின் அமைவியலால்
அணங்கா யிரங்கி யளிமிகலால்
நேச முறநா மிருவோரும்
நிகரா தலினு னிணையடைந்தேன்
நிமிர்வா னகடு கவடுபட
நிவந்தேர் கெழிய தமிழ்ப் பொழில்வாய்
வாச மலரே! மலர்மிடையும்
வடிவார் கொடியே! மடப்பிடியே!
மதியா தரவு முதிர்ந்தடியேன்
மதிவாழ் புதுவோ திமப்பெடையே!
தேச முழுதும் பணிந்துபணி
தெரிந்து முறைதேர்ந் தவிர்கலைகள்
செறிந்தேரணங் கொள் தமிழரணஞ்
சிறந்தா ரணஞ்சொல் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

கருத்து:—தமிழணங்கே! நீயும் நானும் ஒரே தகுதியுடையே மாயினேம் என்றுன்னை அடைந்தேன் எனக்கருள்புரிக! என்பதாம்.

ஆசிரியன் தமிழணங்கிற்கும் தனக்கும் ஒப்புமை கூறல்:—

ஆசை அனைத்தும் நிறைதர—திசைகள் எல்லாவற்றிற்கும் கற்பினை அறிவுறுத்தலாலும், ஆசைகள் எல்லாவிதங்களும் நிறைதலாலும், மால் அடுத்துவர—திருமால் தொடர்ந்து வருதலாலும், மாயையின் மயக்கம் தொடரப் பெற்றிருத்தலாலும், வால் அறிவுறலால்—தூய ஞானத்தை உடைத்தாயிருத்தலாலும், வெள்ளறிவு (அறிவின்மை) உடைத்தாயிருத்தலாலும், அணியார் அணியின் அமைவியலால்—ஒழுங்குபட்ட அணியிலக்கணங்கள் பொருந்திய இயற்றமிழ் வடிவாயிருத்தலாலும், அணி ஆரணியின் அமைவியலால்—அழகிய ஆரணி என்னும் ஊரில் இருப்பமைந்த தன்மையினாலும், அணங்காய் இரங்கி அளிமிகலால்—தெய்வப்பெண் என்னும் பெயருடையவளாகி அடியவர்க்கிரங்கி அருள்மிகுவதாலும், துன்பமாய் வருந்தியும் நின்பால் அன்பு மிகுவதாலும்.

ஈண்டு, முன்னொருகால் திருமால், கணிகண்ணரைப் பின்தொடர்ந்து 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல்' எனப் பெயர்பெற்ற வரலாற்றையும், ஆசிரியன், தன் சொந்தவூர் ஆரணி என்பதையும் குறித்தமை காண்க.

பொழிலுக்கும் தமிழணங்கிற்கும் ஒப்புமை:—

நிமிர் வான் அகடு—உயர்ந்த வானத்தின் நடுவிடத்தில், கவடுபட—கிளைகள் தாவிநிற்க, நிவந்து ஏர் கெழிய தமிழ்ப்பொழில்வாய்—வளர்ந்து அழகு விளங்கும் இனிய சோலையில், நிமிர்—(மக்களிடத்துள்ள) இறுமாப்பமைந்த, வான்—பெரிய, அகடு—பொல்லாங்கும், கவடு—கபடமும், பட—நீங்கும் வண்ணம் விளங்கும், ஏர்கெழிய—பெருமை பொருந்திய, தமிழ்ப்பொழில்வாய்—தமிழ்ப்பொழிலில். வாசம்-மணம், இருப்பிடம்.

ஈண்டு, நம் செந்தமிழ்ப் புரவலராகிய தமிழவேள் உயர்திரு த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள் B. A; B. L; கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினின்று நிலைபெறுத்தி நிழற்றும் 'தமிழ்ப்பொழில்' என்னுந் திங்கள் வெளியீட்டையும் நினைவூட்டியமை காண்க.

கடல் கொண்ட காதலர்.

திரு. த. உலகநாதன்
ஆசிரிய மாணவன்,
அரசியலார் ஆசிரியர் பயிற்சிக்கூடம், இராணிப்பேட்டை, N. A.

Lord Uillin's Daughter என்னும் அங்கிலக் கவியைத்
தழுவிய மொழிபெயர்ப்பு.

'வானரங்கள் கனிகொடுத்து' என்னும் குறவஞ்சி வண்ணம் இசைக்க.

1. "**வா**னமோ மிகவிருண்டு மழைபெருக்கும் நேரம்,
 வண்புயலும் அலைமோதி வருத்துகின்ற நேரம்,
ஆன பல விடையூறு மாராய்த லின்றி
 அப்பக்கம் சிறுபடகைச் செலுத்துகென வேண்டும்
தேனமர்தாழ் குழலோடு தனித்திங்ஙன் வந்த
 திருவாள! நீயார்? இத் திருமகள்தா னாரோ?
பான்மையுற வெனக்குரைக்க வேண்டு"மென நவிலும்
 படகுடையான் தனக்கிறைவன் சிலமொழிகள் பகர்வான்.

2. "திருவளரித் தீவிலுறை யொருவணிக இளைஞன்
 தினகரனென்பேரிந்தத் தேமொழியா ளென்றன்
அருமையுயிர்க் காதலியோர் பெருஞ்செல்வன் தவத்தால்
 ஆயபயன்; இளமைமுத லெனைவிழைந்த பாவை;
இருவருள முகிழ்த்தெழுந்த காதலது கண்டும்
 எமைமன்றல் புரிவிக்க மனமில்லா திடுக்கண்
தருமிவளின் தந்தையெனுந் தறுகண்ணன் காணாத்
 தன்மையினி லிரவிடையே தனித்துவர லுற்றோம்.

3. இவள் பிரிவை யவனுணரின் இன்னேரம் வெகுண்டே
 இவண்வருவ னென்னையுயிர் காய்ந்திடுவன் பின்னர்
எவர்தாமிவ் விளங்கொடியா ளின்னலொழித் திடுவர்
 இருவெள்ளி தருவனெமை யப்பக்கம் சேர்ப்பின்
தவமுடையாய்! விரைந்திடுவாய்," எனத்தலைவன் சாற்றத்
 தக்கமொழி செவிமடுத்தத் தோணியிறை கனிந்தே
"கவலையுறீர்! இருவெள்ளிக் காசையெனக் கில்லை
 காதலரைக் கரைசேர்த்தல் கடமையெனக் கென்றான்.

4. என்றுமொழி தந்தவரை நாவாயி லேற்றி
 யிறக்கையிலா அன்னமென இருங்கடலிற் செலுத்த
அன்றாழி முடிவெனவே புயல்காற்று மோத
 அலைகடலும் நிலைகலங்கி நாவாயை யலைக்கத்

துன்றினன்தே மொழியாளின் தந்தைகடற் கரையைத்
தொலைவினிலே கண்டனனத் தோகையொடு தோன்றல்
கன்றிழக்கும் பசுப்போலக் கன்மனத்தா னுருகிக்
காதலரைக் கருங்கடலுட் கொள்ளுமெனக் கவன்றான்.

5. "தேமொழியாய்! தினகரனே! செய்தபிழை யறிந்தேன்
செயலறியேன் வருவீரேல் உமக்குமணஞ் செய்கே
ஆமுறைகள் பலகாண்பேன் அணைந்திடுவீ ரீங்"கென்(று)
அரற்றினன்என் செயவல்லா னறிவில்லாப் பாவி
காமுறுதண் கடனீரிற் கலங்கவிழக் கண்டான்;
காதலன்றாள் காதலியின் கைதழுவக் கண்டான்;
ஏமமுற நாவாயின் இறைவனையும் அலைக்கீழ்
இருக்கவெனத் தழுவியவன் உள்ளநிலை செப்பும்.

6. திரைகடலுட் டினகரனும் தேமொழியுஞ் செல்லத்
திகைத்தங்கே நின்றழுத தந்தைவிழி நீரின்
நிரையுறையா றெனவொழுகிக் கடனீரிற் கலக்க
"நேர்மையிலா மதியுடையேன் செய்தசெய லென்னே!
விரைகமழ்மென் குழலாளை விழைந்தவனுக் கீயா
வீணனானே"னென்ன வெந்துமனம் நைந்தான்.
"அரைமதியாய்! காதலரின் வாழ்வழித்தாய்" என்றே
அலைகடலும் ஓவென்றங் கறைதல் செயுமன்றே!

புலவர் பிரிவு.

யாழ்ப்பாணம் மேலைப்புலோலி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மாணவர் விசுவலிங்கப் பிள்ளை அவர்களின் புதல்வரும் திருவத்திபுரம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் புலவரும் ஆகிய சைவத் திருவாளர் வி. சாமிநாதப் பிள்ளை அவர்கள் 16–1–41ந் தேதியன்று இறைவன் திருவடிநீழல் எய்தினர் என அறியவந்தோம். நம் தமிழணங்கின்பால் நிறைந்த ஆர்வம் சிறந்த இப்புலவர்பெருமான் பிரிவு நம்மனைவர்க்கும் பெருந்துயர் விளைவிப்பதாகும். பற்பல சிறந்த உரைநடை நூற்களுக்கும் செய்யுள் நூற்களுக்கும் ஆசிரியராகிய இப்பெரியார் பிரிந்தமை தமிழ்நாட்டிற்கு நேர்ந்த குறைகளில் ஒன்றாகும். இத்தமிழ்ப்பெரும் புலவரின் ஆருயிர் நிறைந்த ஆறுதல் உறுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம். அன்னார் குடும்பத்தினர்க்கு நம் உளங்கனிந்த தேற்றரவு உரித்தாகுக.

ஆசிரியன்.

கோலின் செம்மை.

திரு. சா. நடராசன்
கூட்டுறவுக் கண்காணிப்பாளர், வேலூர்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவையன்றியும், இதுகாறும் தன் ஆருயிர்த் தோழனென மதித்து என்னை உடன் வைத்துக்கொண்டு உணவு உண்டு அவன் தம்பிமாரும் சுற்றமும் என்னடிவணங்க எனக்குத் தோற்றமும் ஏற்றமும் அளித்தான். அத்தகைய அரசனுக்கு உறுதியை உண்டாக்குதற்கு, "செருமுனைச் சென்று செஞ் சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும், கருமமும், தருமமும் ஆகும்' எனக் கல் மனமும் கரையுமாறு தான் செய்ந்நன்றி மறவாமையை அன்னைக்கு அறிவுறுத்தினன். துரியோதனன் தனக்குச் செய்த நன்மைகள் பலவிருக்க, அவற்றுளெல்லாம் அவனோடிருந்து உண்ட பழிதீர்ந்த அறுசுவை உண்டியின் பயனையே கன்னன் பெரிதாகக் கருதி அதனையே "செஞ்சோற்றுக் கடன்" எனக் குறிப்பித்தான். தன் உயிர் நீங்குமளவும் அவன் இக்கருத்தையே கொண்டிருந்தானென்பது," வெஞ்சோற்றோ டினிதருந்தி யமுதருந்தும் விண்ணவர் போலிந் நெடுநாள் விழைந்து வாழ்ந்தேன், செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனுகில் திண்டோள்கள் வளர்த்ததனற் செயல் வேறுண்டோ" எனவும், "செருவிலெனை துயிரனைய தோழற்காகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்" எனவும் பின்னர் கன்னபருவத்திலும் உரைத்தவாற்றுல் துணியப்படும். எனவே அந்தச் சோறு "செஞ்சோறு" ஆவதற்கு அது அறுசுவையோடு பொருந்தியிருந்தது மாத்திரமேயன்றித் துரியன் கன்னன்பால் மிக்க அன்பு செலுத்திப் பழிக்கு இடனின்றி மானக்குறைவு இல்லாதபடி இட்ட பெருமிதமும் காரணமாம் என்பது பெற்றும். அவ்வாறு உண்பித்தலே இல்லறம் நடாத்தும் மகனின் தலையாய கடனுமென்று ஆசிரியர் திருவள்ளுவனாரும் "விருந்தோம்பல்" என்னும் தலைப்பின்கீழ்க் குறித்துப் போந்தார். ஐயமிடும் மக்கள் இதை மனத்திருத்தி, இல்லையென்றிரப்பார்க்கு இல்லையென்னாது, சுடுசொல் கூறாது, தாம் இடும் சோற்றைச் "செஞ்சோறு" ஆக்க விழைவார்களாக.

இனி, செம்மையென்ற சொல்லின் அடியாகவே சிவம், சிவப்பு என்ற சொற்கள் தோன்றின. சிவ வழிபாடு தமிழரால் தொடங்கப் பெற்றது என்பது தற்கால ஆராய்ச்சிகளிற் புலனும். சிவனுக்குத்

திருமேனி செம்மேனியாதல் "சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மான்" என்னுந் தேவாரத்தானும் இன்னபிற சான்றுகளானும் அறியப்படும். இருக்கு வேதத்தில் சிவலிங்க வழிவாடு இகழப்படுவதால் அது முதலில் ஆரியருக்கு உரியதன்று என்பது தெளிவு. ஆயினும், உருத்திரன் என்ற வடசொல் செம்மையன் என்று பொருள்படும். எனவே செம்மேனியுடைய சிவனது வழிபாடே ஆரியத்துள் உருத்திர வழிபாடாகத் தழுவப்பட்டது என்று கொள்வதில் மிகையொன்றுமில்லை.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலா" முதல்வற்குச் செம்மேனி உளதாக நம் சான்றோர் ஆண்டாண்டுக் கூறிப் போந்ததென்னை? இறைவனுக்கு 'முழுத்தழல்மேனி' உளதாக மணிவாசகனாருந் திருவாசகத்துள் பன்முறையும் ஓதுவாராயினர். முழுத்தழலுக்கும் செந்நிறமே அமைந்திருத்தல் நோக்கற்பாலது. மண், புனல், அனல், வளி, விசும்பு என்னும் ஐம்பெரும் பொருள்களுள் அனலினையே இறைவன் தான் விளங்குதற்கு வாயிலாகக் கொண்டானென்பது போதர, இறைவனுக்குச் செம்மேனி வகுத்தனர்போலும் நம் சான்றோர். என்னையெனின், அனல் ஒன்றுமே இறைவனியல்பை ஒரு புடையொப்பதாம். யாங்ஙனமெனின், இறைவன் தன் அருளொளி விளக்கத்தால் உயிர்களின் அக இருளை (ஆணவத்தை)த் துரக்குமாறுபோல அனலும் ஒளியுடைப் பொருளாய் உயிர்கட்குப் புறத்தேயுள்ள பாயிருளைப் பருகுதலானும், இறைவன் என்றும் தான் தூயனாய் இருந்தே தூயவல்லா ஏனைப் பொருள்களையெல்லாந் தூய்மை செய்தல்போல, அனலும் தன் தூய்மை கெடாது, தன்பாற் சார்ந்த தூயவல்லாப் பொருள்களையும் எரித்துச் சாம்பராக்கித் தூய்மை செய்தலானும், இறைவன் அருவாயும் உருவாயுமிருந்து உயிர்களால் பற்றப் படாமைபோல அனல் விறகினுள் அருவாய் மறைந்திருந்தும் முறுகக்கடைந்தவழி அவ்விறகின் கண்புலனாய் உருவுகொளத் தோன்றியும் எவரானும் எதனானும் பற்றப்படாத இயல்பிற்றாய் நிற்றலானும், இறைவன் எல்லா வுலகங்களினும், எல்லாப் பொருள்களினும், எல்லா உயிர்களினும், விரவி நிற்றல்போல, அனலும் எல்லா உலகங்களினும், எல்லாப் பொருள்களினும், எல்லா உயிர்களினும், ஊடுருவி நிற்றலானும் அனல் ஒருவாற்றால் இறைவனியல்போடு ஒப்புமை யுடைத்தாதல் காணலாம். இஃதல்லாத ஏனை நான்கு பொருள்களுள் வளியும் (காற்றும்) விசும்பும் தம்மியற்கையில் ஒளி விளக்கமில்லா அருவப் பொருள்களாய் இருத்தலானும், மண்ணும் புனலும் கட்புலனும் உருவுடையவேனும், அவையும் ஒளிவிளக்கம் வாயாதனவாய்த் தூயவல்லாப் புன்பொருட் சேர்க்கையால் தாமுந் தூய்மை கெட்டுப் பருஉப்பொருள்களாய் உயிர்களாற் பற்றப்படுவனவாய் இருத்தலானும் அவை நான்கும் இறைவனியல்போடு ஒரு சிறிதும் ஒவ்வாமையின் அவை

அவனது விளக்கத்திற்கு வாயிலாகமாட்டாவாயின வென்க. இக் கருத்துப்பற்றியே தமிழரின் திருமணம் முதலிய சிறப்பு விழாக்களில் சிவ வழிபாடுதோன்ற அனல் வழிவாடு செய்து, பின்னர் திருமணம் சூடும் வழக்கம் ஏற்படலாயிற்று. இஃதறியமாட்டாத தமிழரில் ஒரு சாரார் திருமண காலங்களில் அனல் வழிபாடு முதலியவை பொருளற்றனவென்று செருக்கிக் கூறுவர்.

நிறங்கள் ஏழினுள்ளும் செந்நிறமே சிறந்ததென்பது சொல்லாமலே விளங்கும். செம்மையென்னும் சொல்லினடியாகச் சிவப்பு என்னும் சொல் பிறந்ததொன்றே அதற்குப் போதிய சான்றாம். நிறங்களுள் பசுமை இளமையைக் குறித்தல்போலச் செம்மை முதிர்ந்து பக்குவமடைந்த நிலையைக் குறிக்கும். மரத்தில் முதிராத இளங்காய் பசுமை நிறமாக இருத்தலும் முதிர்ந்த பழம் செந்நிறமடைதலும் இதனை வலியுறுத்தும். இது தோன்றவே எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் படைத்த 'வால் அறிவனு'கிய இறைவனுக்குச் செம்மேனி உளதாக நம் ஆன்றோர் குறித்துப் போந்தனர் போலும். வானவில்லின் நிறம் ஏழினுள்ளும் செந்நிறமே மிக்க வலியுள்ளதென்பது விஞ்ஞான நூலார் கண்டறிந்த உண்மை. மற்றெந்த மருந்தாலும் தீராத நோயைக்கூடத் தற்காலத்தில் Infra Red Rays எனப்படும் செந்நிறத்துக்கப்பால் வானவில்லில் கட்புலனாகாத கதிர்களால் தீர்த்துவைக்கச் சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. மலரில் சிறந்த தாமரையும், ரோசாவும் செந்நிறமாதலும், உயிர்க்கு உறுதி பயக்கும் குருதியும் செந்நிறமாதலும் பொதுவாகவே செந்நிறமுடைய பொருட்கள் யாவும் பொலிவுறுதலும் நாம் நாடோறும் காணும் காட்சியாகும். இதுவரை கூறியவாற்றால், செம்மையென்ற சொல்லின் சீரிய தன்மை ஒருவாறு விளங்கும்.

செந்நெறிபூண்டு செங்கோல்தாங்கும் மன்னன் மக்களால் எல்லாம் வல்ல இறைவனுக்கு நிகராகவே கருதப்படுதலை மேலே விளக்கினும். அவ்விறைவன் போன்றே அரசனுக்கும் செம்மேனி உளதாக வண்டமிழ்ப் புலவர் பலர் கூறிப் போந்தனர். அரசனது கண், கை, கால், மனம் முதலிய அகப்புற உறுப்புக்கள் யாவும் செம்மையுடையனவாகவே புலவரால் பாடல் சான்றன. "அவாவுறு செம்முகம்" "தாமரைச் செங்கண்," "பங்கயச் செங்கை," "செம்பொன் சீரடி," "செம்மனத்தான்," "செய்யதாள் தொழு மன்னனைச் செங்கையால் தழுவி" என வரூஉம் சொற்றொடர்கள் உளங்கொள்ளத் தக்கனவாம்.

(தொடரும்.)

204

பரிணாமவாதம்.

திரு. K. பிரம்மசாரி M. A; L. T;

பரிணாமம் என்பதன் அர்த்தம்.

166-ம் பக்கத் தொடர்ச்சி.

திருத்தம்: பக்கம் 165-ல் கடைசி வாக்கியத்தை டார்வின் சித்தாந்தம் புஸ்தகரூபமாக வெளிவந்தபிறகு லாமார்க்கின் கொள்கைகள் கொஞ்சகாலம் வரை மங்கிக் கிடந்தன. என்று மாற்றி அமைத்துக்கொள்க.

டார்வின் புஸ்தகம் வெளிவந்த சிலவாண்டுகளுக்குப்பின் அவருடைய சித்தாந்தத்திற்கு ஆட்சேபணைகள் அநேகம் எழுந்தன. அவைகளில் சிலவற்றை இங்குக் குறிப்போம். சிறிய சிறிய வித்தியாசங்கள் ஒன்றுசேர்ந்து பெரிய வித்தியாசமுள்ள பிராணிகள் உண்டாகின்றனவா? என்பது ஒன்று. மேற்படி சிறிய சிறிய வித்தியாசங்களைச் சந்ததிகளும் பெறுகின்றனவா ? என்பது மற்றொன்று. இக்கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு டார்வின் அவர்களுக்கு அக்காலத்தில் நேரான அநுபவங்களில்லை. பெரும்பாலும் அவர் புறா வளர்ப்போர் அநுபவத்தைக்கொண்டே சிறிய சிறிய வித்தியாசங்கள் சந்ததிகளுக்குச் செல்லக்கூடுமென்று நம்பினர். இயற்கையில் அதாவது காடுகளில் காட்டுப் புறா மட்டுமே அகப்படுகின்றது. ஆனல் புறா வளர்ப்போர், ஆட்டப்புறா வென்றும், கர்ணப் புறா வென்றும், இம்மாதிரிப் பலவிதப் புறாக்களை வைத்திருக்கிறார்கள். இவைகள் உற்பத்தியாகும் விதமும் பலருக்குத் தெரிந்திருக்கலாம். அதாவது ஒரு ஜதை புறாக்களிலிருந்து பல குஞ்சுகள் உண்டாகின்றன இவைகள் ஒவ்வொன்றும் சிற்சில வித்தியாசத்தோடு காணப்படும் (வித்தியாசம் வரும் காரணம் பிறகு கவனிப்போம்) புறா வளர்ப்போன் இவற்றுள் தனக்கு இஷ்டமான அல்லது வேண்டிய வித்தியாசங்காட்டும் குஞ்சுகளைமாத்திரம் எடுத்துத் தனியே வைத்துக்கொள்ளுகிறான். பிறகு இவைகள் வளர்ந்து வயது வந்தபிறகு இவைகளை ஜோடி சேர்த்து, இவைகளிலிருந்து மீண்டும் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறான். இவைகளிலிருந்து உண்டாகும் குஞ்சுகள் தாய் தந்தையர்களுடைய வித்தியாசத்தை அல்லது குணநிசயத்தை அதிகப்படுத்திக்காட்டும். அல்லது இரட்டித்துக் காட்டும். இவை முதல் தலைமுறை புறாக்கள் இவைகளை மறுபடியும் புணரச் செய்விப்பதால், இரண்டாந் தலைமுறையில் மேற்குறித்த குணமோ அல்லது வித்தியாசமோ முதல்

தலைமுறைப் புறுக்களைவிட அதிகமாகக் காணப்படும். இவ்வாறு ஒவ்வொரு தலைமுறையிலும் குறிப்பான ஒரு குணத்தை அதிகப்படுத்திக்கொண்டுபோய் முடிவில் பலவிதப் புறு வினங்களைப் புறு வளர்ப்போர் உற்பத்தி செய்கிறார்கள். இம்மாதிரியே பலவிதக் குதிரைகளையும், பலஜாதி நாய்களையும், ஆடு, மாடு, பழம், பூ முதலியவைகளையும் உற்பத்தியாக்குகிறார்கள். பழக்கப்பட்ட வீட்டு மிருகங்களில் வித்தியாசம் தோன்றுவது போலவே, இயற்கையிலும் அவ்வாறே புதிய புதிய பிராணிகள் உண்டாகலாமென்று டார்வின் நினைத்தார். ஆகையால் மனிதன் புதிய பிராணிகளை உண்டாக்கும் முயற்சிக்குச் செயற்கைத்தேர்தல் என்றும், இயற்கையிலேயே உண்டாகும் விதத்திற்கு இயற்கைத்தேர்தல் என்றும் பெயரிட்டார்.

டார்வின் சித்தாந்தப்படி 'இயற்கைத்தேர்தல்' ஒன்றுமட்டுமே ஜந்து பரிணாமத்திற்குத் தக்க காரணமாகும். வெகுகாலமாகப் பிராணி சாஸ்திரிகளும் இதையே சரியான காரணமென்று ஒத்துக்கொண்டார்கள். ஆனால் 19-ம் நூற்றாண்டின் கடைசியில் டார்வின் இயற்கைத்தேர்தல் சரியான காரணமாகாதென்று பலர் ஆக்ஷேபனை செய்யத் தொடங்கினர். ஆனால் அநேகவருஷ ஆராய்ச்சியின் பிறகு, அப்போது எதிர்த்தவர்களெல்லாம் இப்போது ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்களின் ஆக்ஷேபனைகளையும், அவைகளுக்குச் சமாதானங்களையும் கூறுமுன் டார்வின் சித்தாந்தத்தைப்பற்றி இன்னும் சில வார்த்தைகள் சொல்லவேண்டியிருக்கிறது.

பிராணிகளுள் அதிலும் உயர்ந்தவகைப் பிராணிகளுள் ஜனன உறுப்புக்களைக்கொண்டு ஆணென்றும் பெண்ணென்றும் நிச்சயிக்கலாம். இந்த முதல்தரமான அல்லது அடிப்படையான லிங்க பேதத்தைத் தவிர, இரண்டாந்தரமான சில அவயவ அமைப்புக்களைக்கொண்டும், ஆண் பெண் பேதத்தைத் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக ஆண் சிங்கத்திற்கும் ஆண் காட்டெருமைக்கும் பிடரி மயிரும், ஆண் மானுக்குக் கிளைக் கொம்பும், யானை, பன்றி, முதலிய விலங்குகளுக்குப் பெரிய கோரைப் பற்களும் காணப்படுகின்றன. புள் இனங்களில் சேவலுக்குக் காலில் முள்ளும், தலையில் கொண்டையும், இருத்தல்போலவே ஆண் மயிலுக்கு அழகிய தோகையும், சில பறவைகளில் ஆண் இனத்திற்குமட்டும் நேர்த்தியான சிறகுகளும், ரம்மியமான குரலும் ஆகியவைகள் உதாரணங்களாம்.

சில அறுகால் எண்கால், பூச்சிகளுள் ஆண் பூச்சிகளுக்கு அழகான வர்ண அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வளவு அழகான வர்ணம் பெண் பூச்சிகளுள் காணப்படுவதில்லை. இந்த வர்ண வித்தியாசத்தைப் பெரும்பாலும் புள்ளினங்களிலும், வண்ணாத்திப் பூச்சி வகைகளிலும் தெளிவாகக் காணலாம். மேலும், வண்டினங்கள் சிலவற்றில் ஆண்களுக்குத் தலைப்பாகத்தில் கொம்புகள் காணப்படுகின்றன. இதுவும் மேற்சொன்ன நிற வித்தியாசமும், ஆண், பெண் ஒன்றையொன்று உடனே தெரிந்துகொண்டு புணர்ச்சி செய்வதற்கு உதவியாயிருக்கின்றன.

இப்படிச் சாசுவதமாய் இருக்கும் வித்தியாசம் தவிர, புணர்ச்சிக்காலத்தில் மட்டும் தோன்றி மறையும் வித்தியாசங்களும் இருக்கின்றன. இவ்வித்தியாசத்தையும் பக்ஷியினங்களிலேதான் அதிகம் காணமுடியும். சில பட்டாம்பூச்சி வகைகளிலும் சில மான் வகைகளிலும், ருதுகாலங்களில் பெண் பிராணிகளிடமிருந்து ஒருவித வாசனை வீசுவதுண்டு. இதை அறிந்துகொள்வதற்காக, அவ்வவ்வினங்களைச் சேர்ந்த ஆண் பிராணிகளுக்கும் இயற்கையாக இருக்கும் அவயவங்களில், அச்சமயங்களில்மட்டும் சில மாறுதல்களுண்டாகி, அக்காலம் கழிந்தவுடன் அவை தாமாகவே மறைந்துவிடுகின்றன.

ஆனால், இவைகள் எப்படி உண்டாயினவென்பதையும், அவற்றின் அவசியத்தையும் விளக்கிக்காட்டிய தனிப்பெரும் சிறப்பு டார்வினைச் சேர்ந்ததே. இதை இங்கே சுருக்கமாகக் கவனிப்போம்.

உயிர் வாழ்வதன் நிமித்தம், அதாவது ஒரேவிதமான உணவு, காற்று, வெளிச்சம் முதலியவற்றிற்காக எவ்வாறு சச்சரவு உண்டாகிறதோ, அவ்வாறே வாழ்க்கைத் துணையின் நிமித்தமும் சச்சரவு ஏற்படுகிறது. பல ஆண் பிராணிகள் ஒரு பெண் பிராணிக்காகப் போட்டியும் சண்டையும் இடுகின்றன. இந்தப் போராட்டமும் சண்டையும் எவ்வளவு கொடூரமாயும், நீடித்தும் இருக்கின்றனவென்பதை ஆடு, மாடு, நாய், கோழி முதலிய வீட்டு மிருகங்களைக் கவனித்தால் நன்கு விளங்கும். இப்பிரபஞ்சம் முழுவதும் இம்மாதிரியான போராட்டம் தவிர வேறு என்னதான் காணமுடியும்? இதை டார்வின் தமது "மனித உற்பத்தி" என்னும் புஸ்தகத்தில் சந்தேகத்துக்கிடமின்றிப் பல உதாரணங்களைக் கொண்டு விளக்கியிருக்கிறார்.

(தொடரும்.)

உள்ளமும் வாழ்க்கையும்.

திரு. N. B. இராமலிங்கம் B. A;
Accountant copying branch P. M. G. Office, Madras.

186-ம் பக்கத் தொடர்ச்சி.

Mr. James Allen என்னும் அங்கிலப் புலவர் எழுதிய Out from the heart என்னும் கட்டுரையைத் தழுவிய மொழி பெயர்ப்பு.

நாக்கினுல் செய்யக்கூடிய குற்றங்களில் முதலாவது தூஷித்தல்:—

தூஷணையாவது பிறரைப்பற்றித் தப்பான அபிப்பிராயத்தைக் கூறுவது. சிறிய குற்றங்களைப் பெரியவாகச் சொல்லித் தூற்றுவது. எதிரில் இருக்கும்போது கை குலுக்கியும், புன்முறுவல் செய்தும், முத்தம் கொடுத்தும் உபசரித்த நண்பன் எதிரி வில்லாதபொழுது இகழ்தல். உத்தம வாழ்க்கையை விரும்புபவன் இக்குற்றத்தினின் றும் நீங்கல் வேண்டும். பிறருடைய நடவடிக்கையைப்பற்றியும் பெரு மையைப்பற்றியும் உயர்வாக நினைத்தல் வேண்டும்.

வீண்பேச்சாவது:—

பிறருடைய சொந்த விஷயங்களைப்பற்றிப் பேசுவது; காலத் தைப் போக்குவதற்கென்றே பேசுவது; குறிப்பில்லாத பொருத்த மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவது. உத்தம மனிதன் தன் நாக்கை யடக்கி மனத்தை ஆள்வான். காரியார்த்தமாகவே பேசுவான், அல்லது மௌனமாயிருப்பான்.

கோரமான வார்த்தைகள்:—

அதாவது பிறரைத் திட்டுவதும் அவர்கள்மீது குற்றம் சாற்று வதுமாகும். ஒருவன் பிறரைத் திட்ட முயலும்போது நாக்கை அடக்கல்வேண்டும்.

ஆலோசனையில்லாத பேச்சு:—

வேடிக்கைப் பேச்சு; ஈனமான கதைகளைச் சிரிப்பாகவே சொல் வது; ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்களைப்பற்றி இழிவாகவும் மரியாதையில்லாமலும் பேசுதல். சன்மார்க்கத்தை விரும்புபவன் இக்குற்றத்தைச் செய்தல் கூடாது.

நாக்கினுல் செய்யக்கூடிய குற்றங்களில் கடைசியில் உள்ளது புறங்கூறுதல்.

குற்றங் கண்டுபிடிப்பதற்காகவே பிறர் வார்த்தைகளைக் கவனிப்பவன் சன்மார்க்கத்தை அடையமாட்டான்.

மூன்ருவது பாடம் என்ன? கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் சத்தியத்தை அறிய முடியாது. கடமையைச் செய்தல் கஷ்டம் என்று சிலர் கருதுகிருர்கள். இது குற்றமாகும். கடமையைச் செய்தல் சுயநலமற்ற உத்தம வேலையாகக் கவனித்தல் வேண்டும். கடமையைச் செய்வதில் சுயநலத்தையும், சௌகரியத்தையும் கருதுதல் கூடாது. கடமையில் தவறுபவன் சன்மார்க்கத்தில் தவறுவான். சுயநலமின்றிக் கடமையைச் செய்பவனே சத்தியத்தை அடையக்கூடும்.

சலிக்காத நேர்மையாவது:—

மோசம், ஏமாற்றுதல், பொய்பேசுதல், சூழ்ச்சிசெய்தல்—இவைகள் உள்ளத்தில் சிறிதும் இருத்தல் கூடா. பேச்சியில் உயர்வு நிகழ்ச்சியே கூடாது. உண்மையை உள்ளபடி சொல்லல்வேண்டும். நினைவிலும், வார்த்தையிலும், செய்கையிலும் சத்தியமாக நடத்தல் வேண்டும்.

அளவுகடந்த மன்னிப்பு:—

நம் பெருமைக்குப் பிறரால் மானக்கேடு வந்துவிட்டதென்று நினைத்தல் கூடாது. பழிக்குப் பழி வாங்கும் குணம் மிகவும் இழிவானது. தயாள குணத்தாலும் பரந்த நோக்கத்தாலும் பிறர் குற்றங்களை மன்னித்தல் வேண்டும். உத்தம மனிதனுக்கு மானக்கேடு என்பதில்லை. பழிக்குப்பழி வாங்கும் குணம் அவனிடம் கிடையாது. உத்தமனுக்கு விரோதிகளே இல்லை. வேணுமென்றே மனிதர் சிலர் அவனை விரோதித்தாலும் அவன் அவர்களிடம் அன்பாகவே நடந்து கொள்வான்.

மேற்கூறிய விஷயங்களில் ஒவ்வொருவரும் தினந்தோறும் பழகுதல் வேண்டும். இப்பயிற்சியே யார்க்கும் ஆத்மஞானத்தை அளிக்க வல்லது.

(தொடரும்.)

209

இயல்வது கரவேல்.

திரு S. குழந்தைசாமி அவர்கள்,

B. A; Senior, St. Xavier's College, Palamcottah.

உலகுடன் பிறந்த நம் ஒண்தமிழணங்கு இன்னமும் தன் எழில் சிதையாது, நடை தளராது, கன்னியன்னமென மிளிர்வதன் காரணம் அவள் சிறப்பியல்களேயாம். கற்றோரும், மற்றோரும் ஒருபடித்தாய் உரைக்கத்தக்க மென்மை மன்னிய நல்லியல் ஒலியையே நம் தமிழன்னை நயப்பாள். உரப்பல்,கனைத்தல்,உறுமல்,முதலிய வெற்றொலிகளை அவள் ஒருபோதும் விரும்பாள். இயற்கைக்கு இயைந்து நிற்றலே அவளது நேரியநோன்பு.இந்நோன்பே அவளுக்கு நாகிளமையை நல்கியுள்ளது. 'ஹீப்ரூ' 'லத்தீன்' 'ஸம்ஸ்க்ருதம்' முதலிய மொழிகள் கெட்டழிந்து வழக்கற்றுப் போனமைக்குக் காரணம் அவை இயற்கைக்கு மாறான பல தன்மைகளைக் கொண்டிருந்தமையேயாம். முற்றிலும் இயற்கைக்கிசைந்த முறையில் உலகத்தில் ஒரு மொழிதான் இருத்தற்கியலும். அதுவே நம் தமிழ். நாளடைவில் ஏனைய மொழிகள் யாவும் அருகி, நிற்கும். (அடங்கும்) நம்மருமைத்தமிழ் ஒன்றே என்றென்றும் பெருகிநிற்கும்.(நிலைக்கும்) யான் வணங்கும் தமிழணங்கின் தனிப்பெரும் மக்காள்! சற்றே நீள நினைந்து நோக்குமின்! அ, இ, உ, முதலிய உயிரொலிகளுக்கு அழிவுண்டோ? அவை அழிந்திடில் வானமும் பூமியும் அழிந்து போம். எனவே உலகுள்ளளவும் நம் செந்தமிழணங்கு சிறப்புடன் விளங்குவாள்.

இத்துணைச் சிறப்புடைய தமிழுக்குத் தொண்டு புரிந்தோர் பண்டைக் காலத்தவர் பலர். அத்தொண்டின் பயனாகப் பல பாட்டுக்கள், காவியங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கம்பர் கவித்திறனை வியவாதார் யாருளர்? வள்ளுவர் கூற்றைக் கொள்ளாதார் யாருளர்? சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன நம் தமிழணங்கின் சீரிய அணிகலன்களாவனவன்றோ! மற்றின்னும் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்காதிய செந்தமிழ்க் கருவூலங்களை நமக்குச் சமைத்துத் தந்த பண்டைத் தண்டமிழ்த் தொண்டர்களைப் போற்றிப் புகழ்வோமாக! அவர் தம் தமிழறிவின் மாண்பென்னே! சொல் நயமும்,பொருள் நயமும் ஒருங்கே யமைந்த பாவியற்று மாற்றலின் சிறப்பென்னே! சீரிய அறிவும் உயர்ந்த நோக்கமுமுடைய அன்னார்,பிற்காலத்தவராய நமக்கென ஒருசிறந்த

தமிழ்ப்பணியை விட்டுச் சென்றனர். பொருள் நலம், சொல் வளம் மிக்க உரைநடை நூற்கள் வரைவதே அப்பணி என்பதை யறியுந் திறன்கூட நம்மவரில் பலருக்கில்லை. இது மிகவும் வருந்தத் தக்கதே.

அன்பர்காள்! இயற்கைக்குமாறுய ஒலியமைப்புடைய அங்கில மொழியைப் பாருங்கள். அதில் எத்தனை உரைநடை நூல்கள் இருக்கின்றன. அமிழ்தினும் இனிய தமிழ் மொழியாம் நம் தாய்மொழியைவிட வேறு எந்த மொழி சிறந்தது? ஒரு மொழியுமில்லை. எனினும் நம் தமிழில் போதிய உரைநடை நூல்கள் உண்டோ? இல்லை. இதற்குக் காரணம் நம் மடிமையே. மொழியுலகின் தனிப் பேரரசியாம் நம் தமிழ்ச் செல்வியை அவள் மக்களே பொருட்படுத்தவில்லை எனின் இதனினும் நமக்கு இளிவரல் வேறு என்னை கொல்?

தமிழ்ப் பெரியீர்!

நடை சிறந்த உரை நூல்கள் எழுதும் திறன் நும்பால் உளதோவென நும்மனத்தைத் தட்டிக் கேளுங்கள்! உண்மைத் தமிழர்களுக்கவ்வாற்றலுண்டு. நம் அருந் தமிழணங்கின் ஆதரவுமுண்டு. எனினும் ஏதுமிலா ஏதிலர்போல் நாம் நம் வாழ்க்கையை நடத்துதல் நன்றே! கற்றறிந்தோர் தாந்துய்க்கும் அறிவின்பத்தைப் பிறரும் நுகருமாறு செய்து மகிழ்வர் என்பது பற்றியன்றே!

"தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

எனத் தமிழ்மறை கூறும். கல்வி, இந்நல்லியல்பினைத் தருதலினன்றே! கற்றோர் மக்களென்றும் மற்றோர் மாக்கள் என்றும் மதிக்கப்பெறுகின்றனர்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்."

என்னும் வாய்மை இக்கூற்றினை வலியுறுத்தும். தமிழ் கற்றோர் எல்லோரும் தமிழ்த் தொண்டாற்றித் தம்மை விலங்கினத்தினின்றும் வேறாக்கிக்கொள்ளல் வேண்டும் என்பதே நம் திருவள்ளுவப் பெருந்தகையின் திருவுளம்.

தமிழ் மாணவர்காள்! தமிழ் ஆசிரியர்காள்! நீங்கள் என்ன செய்கின்றீர்கள்! துயில்கின்றீர்களா? சிறந்த நாடகங்கள், கதைகள், கட்டுரைகள், வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், அறிவியல்

நூல்கள், கணித நூல்கள், மருத்துவ நூல்கள், முதலாயின தமிழ் உரை நடையில் ஏன் இன்னும் வெளிவரவில்லை? இதனை நினைக்க, நினைக்க உங்கட்கு நாணந் தோன்றவில்லையா? பண்டு கம்பருக்கும் வள்ளுவருக்கும் உதவிசெய்த நம் தமிழணங்கு இன்று நமக்கும் ஏன் உதவிசெய்யாள்? நாம் தக்க முயற்சியில் மிக்குழைப்போமாயின் உண்மையில் நம் தமிழன்னை நமக்குப் பற்பல வெற்றிகளைத் தட்டாது வருமாறு தண்ணளி புரிவாள். தற்போது நாம் செய்யவேண்டுவது தமிழ் உரை நடை நூற் பெருக்குக்காக முயற்சிசெய்தல் ஆம்.

> "முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
> இன்மை புகுத்திவிடும்"

என்னும் உறுதிமொழியை உளங்கொண்மின்.

'கவியரசர்க் கரசர் கம்பரெங்கே! நாமெங்கே! பொதுமறை வரைந்த வள்ளுவரும் நாமும் ஒப்பாவமோ!' என்றெல்லாம் எண்ணுவதும் பன்னுவதுமே புலமையாமோ! கம்பர் வள்ளுவர் முதலியவர்களைப்போல் நாம் வெற்றிபெறுதல் அரிதாமெனினும் அவர்களைப் போல் முயற்சி செய்வதும் தரிதாமோ? தமிழ் உரை நடை நூல்கள் எழுத முயல்வது நமக்கியல்வதே. "இயல்வது கரவேல்" என்பது ஔவையின் செவ்விய மொழி. நாம் அதன் வழி ஒழுக முயல்வோமாக.

ஆடவர்மட்டு மன்றிப்பெண்டிரும் இத்துறையில் ஈடுபடுதல் வேண்டும். தமிழறிவமைந்த தாய்மார்காள்! நீங்களும் தமிழ்த் தொண்டாற்ற முன் வம்மின்? தாய்மொழி வளர்ச்சிக்குரிய துறைகளிலும் ஆடவர்க்கு உதவிசெய்தல் தாய்மார்களின் கடமையன்றோ? உங்கள் முயற்சியால் தமிழ் உரை நடை ஓங்கிப் பெருகும் என்பது உண்மையே. மாதர்க்கு இயல்பாய் அமைந்தது மென்மைத் தன்மை; தமிழின் இயல்பும் அதுவேயாம். இனி நம் மாதர் கைத்திறனால் நந்தமிழணங்கின் பொன்மேனி புதுப்பிக்கப் பெறல் வேண்டும். எவ்வெவ்வகையினும் தமிழ் உரை நடை தழைத்தற்குத் தமிழர் தக்கமுயற்சி செய்தல் நலம்! இங்ஙனம் முயல்வது யாவர்க்கும் இயல்வதாம். எனவே 'இயல்வது கரவேல்' என்னுங் 'கட்டளைக்கிணங்கி' 'தமிழ் உரை நடைக்கும் எமக்கும் வெகுதூரம்' என்ற ஆதரவற்ற எண்ணத்தில் இனி நாம் அமிழா திருந்து வருந்தினால் எதுவும் திருந்தும். தமிழறிவுடையோரும் வெகுவாகக் கல்லூரி மாணவர்களும் இதனை உளங்கொள்வார்களாக!

212

தமிழணங்கு வாழ்த்துக் கும்மி.

திரு V. S. வடிவேற் பிள்ளை அவர்கள்,
ஆசிரியர், ஹிந்து ஹைஸ்கூல், ஆம்பூர்.

அன்புநெறி கொண்ட வனியிலே—நல்
அறிவை வளர்க்குந் தமிழணங்கே!
இன்புரை யாலெவ ருள்ளத்தினுங்கலை
ஈடேற்றஞ் செய்யுந் தமிழணங்கே! (1)

எல்லோரு மின்புற்றிருக்க வளருமெம்
மின்னமுதாகுந் தமிழணங்கே!
நல்லோர் கருத்தினை நாடுந்தமிழ்த் தொண்டெங்
நாளும் புரியுந் தமிழணங்கே! (2)

கன்னல் மொழிநிறை வாசகத்தேன் கொண்டு
காதுக்கினிக்குந் தமிழணங்கே!
புன்னகை பூத்துப் புகழ்ந்திடவே மக்கள்
புந்திதுலங்குந் தமிழணங்கே! (3)

தித்திக்குமுத்தமிழ் எத்திக்குமோங்கவே
நத்திக்குலாவுந் தமிழணங்கே!
முத்திக்கு வித்தெனும் பத்திசிறந்திட
நித்தியம்வாழுந் தமிழணங்கே! (4)

புத்தம் புதிய சுவைததும்பும் புகழ்ப்
பொன்மொழி கொண்டு மிகத்துலங்கும்
சித்தங் கவருந் தமிழணங்கே! யன்பர்
சேவைக்குழைத்தென்றும் வாழியவே! (5)

கற்பனைத் தேனெனுங் கட்டுரையுஞ் சுவைக்
காவியமும் வண்ண ஓவியமும்
விற்பனர் கைத்திறந் தன்னகத்தேகொண்டு
விளங்கவாழி தமிழணங்கே! (6)

213

குழிப்பன்னி.

திரு. வேலூர் பா. கமலநாதன் அவர்கள்.

உலகத்தைப் படைத்த ஒருவன் உயிர்கள் தங்களுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொள்ள அவைகளுக்கு அறிவையும், ஆற்றலையும் அருளியிருக்கின்றான். அவைகளுட் சில ஆறறிவு படைத்த மனிதனைவிடப் பேராற்றலும், மதி நுட்பமுமுடையனவா யிருக்கின்றன. சிறிய எறும்பு மாரிக்காலத்திற்காகத் தனக்கு வேண்டிய உணவுப் பொருளைக் கோடையிலேயே தேடி வைத்துக்கொள்ளுகிறது. குளவியும், தன் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளி வந்ததும் பசியடங்கத் தின்பதற்காகப் பச்சைப் புழுக்களைப் பிடித்துப்போய்க் கூட்டில் அடைத்துவைத்து முன்னதாகவே அவைகளைத் தன் விஷத்தால் மயக்கமுற்றிருக்கச் செய்கின்றது. இருபதடி உயரம் வீடுகட்டி அதனுள் அரசனும் அரசியுமாய்ப் பல பணியாளிகளுடன் வசிக்கும் கறையான், மனிதனால் செய்யப்படாத பற்பல அற்புதச் செயல்களைச் செய்கின்றது. அதன் சிறப்ப வன்மையைக் கண்டு வியப்பெய்தாதார் யாவர்! எவ்வமில் புகழ்சால் ஔவை மூதாட்டியும் "வான் குருவியின்கூடு வல்லரக்குத் தொல் கறையான், தேன் சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்' எனச் செப்பி இருக்கின்றனர் அன்றோ! மற்றும், மதி நுட்பத்துடன் மற்ற உயிர்களைப் பிடிக்கும் வேட்டுவப் பூச்சிகளின் செயலை நினைத்துப் பார்ப்பின் அவைகளின் அறிவாற்றலை வியவாதிருப்பார் யாரே! கானகத்து வாழும் கடும்புலி, அரிமா முதலியன தமது உடல் வலிவால் ஏனைய எளிய மிருகங்களைக் கொன்று தின்கின்றன. உடல் வலிவில்லாச் சின்னஞ்சிறிய வேட்டுவப் பூச்சிகளே தம் அறிவின் திறத்தால் தமது இரையைத் தேடிக்கொள்ளுகின்றன. அப்படித் தமக்கு வேண்டிய உணவை வேட்டையாடிப் பிடிக்கும் உயிர்களில் குழிப்பன்னியு மொன்றாகும்.

இது, இளமையில் பார்வைக்கு அச்சுறுத்துவதுபோல் இருக்குமெனினும் முற்றிய பருவத்தில் படத்தில் காணப்படுறதுபோல அழகானதொரு பூச்சியாக மாறும். தும்பியைப்போன்ற அழகிய இறக்கைகள் முளைத்து ஆகாயத்தில் வாகாய்ப் பறந்து திரியும். அப்போது அது வேட்டையாடி உயிர்களைப் பிடிப்பதில்லை. குழவிப் பருவத்தேதான் குழி தோண்டிச் சிற்றுயிர்களைப் பிடிக்கும். பார்ப்பதற்கு அச்சந்தருவதுபோல் காணப்படும் குழிப்பன்னி, எறும்பு

முதலிய சிறிய உயிர் இனங்களுக்கு இயமன். இதனால்தான் இதற்கு 'எறும்புகளின் சிங்கம்' (Ant Lion) என்னும் பெயரும் ஏற்பட்டது.

சற்றுச் சதுரமான தலையுடன், விரைவாய் ஓட முடியாத குறுகிய வால்களுடன், வயிற்றுப் பக்கத்திலும் தாடையிலும் முட்களுடையதாய் விளங்குமிதற்குக் கூரிய பற்களுண்டு. இது சிறிய ஓசையையும் நன்றாகக் கேட்டறியும் ஆற்றலுடையது.

வெப்பமுள்ள நாடுகளிலும், இளவெப்பமுடைய இடங்களிலும் இது காணப்படுகின்றது. மணற் பாங்கான இடமே இது மிகவும் விரும்புவது. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் சுமார் 58 வகையான குழிப்பன்னிகள் காணப்படுகின்றனவாம். அந் நாட்டார் குழிப்பன்னியை 'டேல் பக்' (Doodle bug) என அழைப்பராம். குழி தோண்டி இரையைப் பிடிப்பதல்லாமல் மூலை முடுக்குகளிலிருந்து சிறிய உயிர்களின்மீது பாய்ந்து பிடிக்கும் குழிப்பன்னியும் அங்குளதாம்.

இனி, குழிப்பன்னி குழிதோண்டும் விதத்தைக் கவனிப்பாம். அது நல்ல மணற் பாங்கானதொரு விடத்தில் வட்டமாக மண்ணைத் தோண்டுமாம். பிறகு, அவ்வட்டத்தின் நடுவிற்கு வந்து அங்கே தன் உடலை மணலில் அரைப்பாகம் மறையப் புதைத்து நின்று, தனது காலால் மணலைத் தன் தலைமேல் தள்ளிக்கொண்டு பின்னர் தன் தலையை வேகமாயசைத்து உதறி மணலை வட்டத்தின் வெளியே விழும்படி செய்யுமாம். இவ்வாறு தோண்டிச் சுமார் 3 அங்குலச் சுற்றளவுள்ளதொரு குழியை அமைக்குமாம். அக்குழியின் ஆழம் சுமார் $1\frac{1}{2}$ அல்லது 2 அங்குலமிருக்கலாம். குழி தோண்டியபின்னர் அதன் மத்தியில் அடியில் தான் புதையுண்டிருக்குமாம். அதன் தாடை மாத்திரம் வெளியில் தெரியும். இக்குழியானது எறும்புகள் போன்ற சிறிய உயிர்கள் அதிகமாக நடமாடுமிடத்தில் தான் தோண்டப்படும். அவ்விடம் நடமாடும் எறும்பு ஒன்று தீனிதேடி வந்து 'திடு' மென அக்குழியில் இடறி விழுமாயின், அதன் ஆயுள் அன்றே முடிந்ததாகும். குழியினடியில் புதையுண்டு நிற்கும் குழிப்பன்னி, எறும்பு விழுவதால் மணல் சரியும் சத்தங் கேட்டு, விழிப்பாயிருந்து, குழியில் வீழ்ந்த எறும்பைத் தன் கூரிய தாடையால் பற்றி இழுத்துச் செல்லுமாம். ஒருவேளை அவ்வெறும்பு தப்பியோட முயலுமானால், உடனே குழிப்பன்னி தன் தலையால் மணலை வாரி வாரி இறைத்து எறும்பு வெளியேறவொட்டாது செய்து, அதனைப்

பிடித்துக்கொள்ளுமாம். எறும்பு, மணல் சரிவதால் எதையும் நன்றாகப் பற்றி எற முடியாது. தலைமேல் மணல் வந்து விழுதலால், அதில் மூழ்குண்டு குழியில் விழுமாம். படத்தில், குழியில் எறும்பு ஒன்று விழுவதையும் குழியினடியில் குழிப்பன்னி அதனைப் பிடித்துக்கொள்ளக் காத்திருப்பதையும் காணலாம். அவ்வாறு தந்திரமாய்த் தான் தேடிய தீனியைக் குழிப்பன்னி தின்றுவிடுவதில்லை. இரத்தத்தை நன்றாய் உறிஞ்சிக்கொண்டு தோலைத் தன் தலையின் உதவியால் வெளியே எறிந்துவிடுமாம்.



மனிதன் காட்டிடை வாழும் கரியைப் படுகுழி வெட்டிப் பிடிப்பதுபோல் குழிப்பன்னியும், குழிதோண்டி எறும்பு முதலிய உயிர்களைப் பிடிப்பது பெருவியப்பன்றோ! இறைவன் இதற்கு அறிவைத் தந்தருளியிருப்பதை நீள நினைப்பார் யாரே இறும்பூதெய்தார்? செயற்கரிய செயல்களைச் செய்யும் சிறிய உயிர்களின் அறிவுச் செயல்கள் மனிதனையும் நாணமுறச் செய்கின்றவையாய் இருக்கின்றன. மனிதன் தான் கொண்ட கருமம் முற்றுப்பெற்றால் அது தன்னால் தான் முடிந்ததென இறுமாந்து பேசியும், முடிவுறா தொழியின் 'அது தெய்வச் செயல்; அதற்கு நாம் என்னசெய்யலாம்?' எனக் கடவுள்மேல் பழி கூறியும் வாழ்கின்றான். அத்தகைய ஆணவமுற்ற மனிதனுக்கு அறிவுச் சுடர்கொளுத்த ஆண்டவன் நுண்ணுயிர்களுக்கும் வியத்தகு அறிவை அருளியிருக்கின்றனன் போலும்! சுறுசுறுப்பு விடா முயற்சி, முன் யோசனை முதலியன நல்வாழ்க்கைக்கு மிக வேண்டியன வென்பதை ஆறறிவுடைய மனிதனுக்கு மூவறிவுடைய எறும்பினம் கற்பிக்கின்றதன்றோ? குழிப்பன்னி போன்ற சிறிய உயிர்களும் இறைவனருளால் உணவைப் பெற்று உயிர் வாழ்வது கண்டும் நுண்ணிய புழுவினையும் புரந்தருளும் புண்ணியன் மக்களைக் காவா தொழியானென்பதுணர்ந்தும், ஏனோ உலகிடை வாழும் மாந்தர் உணவிற்கும், உடைக்கும் உளமிக நொந்து அல்லலுற்றுத் திரிகின்றனர்? எவ்வளவு பேர் இவைகளுக்காக கைத்துடையார் காற்கீழ்ப் பித்துடையாராய்ப் பல்லெல்லாந் தெரியக் காட்டிக் கைநீட்டி நிற்கின்றனர். இதுதவிர்த்து அவர் ஆண்டவன் அருட்டிறம் போற்றி, அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணி, முனைப்பற்றவராய் வாழ்வாரானால், எத்துணை நலமாயிருக்கும்? அத்தகையவருக்கு ஆண்டவன் அருள் அளவின்றி இருக்குமென்பதை இயம்பவும் வேண்டுமோ!

வாழிய செந்தமிழ்!

இன்ப வாழ்வினன் பண்பு.

திருவத்திபுரம்

திரு. M. A. தேவராஜன் அவர்கள்.

வெண்கலிப்பா.

எத்துணைநன் மகிழ்ச்சியவன் இனிதெய்திக் களிக்கின்றான்!
அத்துணைஇன் பொழுகுவள அகவாழ்வு நடத்துகின்றான்;
தன்னாட்சி செலுத்துகின்றான்; தனிக்குடியில் பிறந்துயர்ந்தான்;
மன்னாட்சிதனில் பிறர்க்கு வணங்கிஒரு தொழில் செய்யான்;
அடிமைவாழ் வழிஒழுகான்; அமைந்தனன்தன் நெறிஉழைப்பால்
மிடிமைசிறி தறியான்காண்; மிகவல்லான்; அவனுடலிற்கு
உறுதுணையாம் கவசமென ஒளிறுபடைக் கலமாகும்
பெறுதுணையுள் ளிருந்துவரும் பெருமைமிகும் உயர்மெய்யார்
எண்ணந்தான்; எளியவுளத் தெழுமுண்மை மிகுவன்மை
திண்ணந்தன் வயத்தனவன்; திறமாந்தீப் பழியெல்லாம்
என்செய்யும்? அவனைத்தம் தலைமைக்குள் இனிதடக்கா;
பின்செய்யும் கொடைச்செயலில் பிறர்க்காத்தன் உயிர்ப்பொருளும்
முன்னரவண் அளித்தற்கு முழுவன்போ டுவந்தென்றும்
நன்னரவன் விருப்புடையான்; நலம்வேண்டிப் பொதுமக்கள்
புகழுந்தான் விரும்பான்; சீர் பொதுளுமுயர் தனிமனிதர்
திகழுமுயர் சிறப்பிற்கும் சிறிதுளமும் விழையானால்,
உலகப்பற் றொருதுகளும் உளத்துமிலன்; அவன் என்றும்
தற்செயலால் பிறர்எய்தும் தனித்தநறும் புகழ்ச்செல்வ
நற்செயலை—ஒருபெரிய நயவஞ்ச முறைத்தொழிலால்
நன்றுயர்தீப் புகழ்நிலையை நயந்துவிழி யுறப்பார்த்துள்
துன்றுமிழி அழுக்காற்றால் துயர்கொள்ளான்; அவன்மேலும்,
மறைவஞ்சப் புகழ்ச்சியணி, மகிழ்வூட்டிக் கொடியவடு
நிறைவஞ்சாத் துயர்செய்யும் நெறிமுறைசொல் மொழியாடல்
வகைஒன்றும் அறியான்; மன்வளர் குறைசீர் பெறும்வழியாம்
தகையிலர சியல்சூழ்ச்சித் தந்திரமார் வினையாண்மை
இம்மியுமீண் டுணரான்காண்; எனினுமவன் உயர்குணநற்
செம்மையுறும் ஒழுக்கமெலாம் திறமாயாய்ந் துணர்கின்றான்
இன்னுமவன் செயல்வாழ்வில் எட்டுணையே னுந்தவற்றின்
சின்னமுறும் பழிகழீஇத் தெளிந்தறிவு வழிதழீஇ
ஒழுகிடுவான்; மனச்சான்றே உரமான புகலிடமாம்;

பழகிடுவான் அதன்வழியே; பழச்சாற்றில் செழுந்தேனைப்
பாலோடு கலந்தாற்போல் பணிமொழியால் முகமன்மிகக்
காலாடு பொழுதுணர்ந்து கருத்தாகப் பொழிந்துபணம்
பறித்துழலும் கொடுங்குள்ளர் பலமெல்லாம் அவன்நிலைமுன்
செறித்தொழியும்; அவன்வீழ்ச்சி செறிபழியும் செறுநர்க்கோர்
மகிழ்வெற்றி வழங்கிடுமோ? மலர்வென்றி அவன்பாற்றே!
மேன்மேலும் கடவுளருள் மிகவிரும்பிப் பகலிரவாத்
தான்மேல்வைகறைஎழுந்தும் தனியேமால் நடுநிசியும்
"முத்திக்கு வித்தாகும் முழுமுதல்வன் அடியிறைஞ்சல்;
தித்திக்கும் கனிமுத்தி" எனத்தெளிந்து தினந்தோறும்
பரிசிலெனும் புவிப்பொருளைப் பழிஎன்று வெறுத்(து) ஒதுக்கித்
துரிசில்நல் விழுமுத்தி துணிந்(து) "அருளைப் பொழிந்தருள்க!"
என்றுள்ளம் குழைந்துகுழைந் திறைவனையே பணிந்தேத்தும்
நன்றுள்ளம் மிகவுடையான்; நயமுடையான்; நலனுடையான்;
நாடோறும் கழியுவகை நயனூற இனிதாய்மெய்ப்
பீடு(று) ஓர் புகழ்நூலைப் பெரிதுவந்து படித்துள்ளம்
செம்மாப்பான்; இலைஎனிலோர் தெவிட்டாத்தன் அகம்நட்ட
அம்மைஎன ஒழுகன்பன் அருகமர்ந்தின் மொழியியம்பித்
தீமையில்நாள் தொறுமவன்பால் சிரித்தினிது விளையாடி
எழுறுவான்; இனிதென்றும் எழிலுறுமித் தகைப்பெரியன்
தனையடிமை கொளுந்தீய தழைத்தோங்கு சுயநலத்தால்
தினையளவும் உயர்நோக்கம், திளைக்கும்பேர் அவாவுறுதி
உள்ளத்தும் பிடித்திலன்; "தாழ்(வு) உறுவம்" எனும் நினைவச்சம்,
கள்ளவுளக் கடும்வெகுளி கடுகளவும் நுகர்ந்தறியான்;
நல்லமன மிகவுடையான்; நலிவில்லான்; இவனுலகில்
இல்லமொடு நிலப்பொருளும் இறையளவும் இலன்; எனினும்
தனக்குத்தான் தலைப்பிரபாய்ச் சலியாநற் குணக்குன்றாய்
மனக்குறைஒன்(று) உடையனலன்; வயங்கொளரிப் பொருட்புவியில்
ஒன்றுமிலன்; எனினுமிவன் உடையவன்மெய் பெருகினிய
என்றுமிலங் கொளிசேர் நுண் எலாப்பொருளும்; அமைதியுளன்;
இப்படிமைத் தவமுனியே இனிமைதரும் உயிர்வாழ்வோன்
எப்படியும் போற்றும் பண்(பு) ஈண்டு.

குறிப்பு:—இஃது அங்கிலத்தில், புலவர்பெருமான் Sir Henry Wotton என்பார் யாத்த "Character of a Happy Life" எனும் நறுங்கவியின் மொழிபெயர்ப்பு என்க. தெற்றெனப் பொருள் விளக்குவான் சற்று விரிக்கப்பெற்றது. இக்கவி இவ்வாண்டுக்குரிய (S. S. L. C. English Text 1941) பத்தாம் வகுப்பு அங்கிலப் பாடத்தில் வந்துளது. அங்கிலக் கவியைக் காண விழைகுநர் ஆண்டுக் காண்க.

பல்லவர்.

திரு. ஞா. ஜோஸப் பாலசுந்தரம் அவர்கள் B. A; L. T;
கன்கார்டியா போதனாமுறைக் கலைக்கழகம், ஆம்பூர்.

பல்லவர்களின் புகழ் தமிழ் இலக்கிய உலகிலும் இடம்பெற்றுள்ளது. இவர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில், தென்னாட்டில் ஏற்றமுற்றிருந்தனர். இவர்களது ஆட்சி கிருஷ்ணாநதியிலிருந்து காவேரி நதி வரையிலும் மாட்சிமையுற்றிருந்தது. இவர்களின் பழமைபற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் ஒன்றும் உறுதியாகக் கூறுதற்கில்லை. எனினும், சரித்திரத்தையும் பிறசான்றுகளையும் துணைகொண்டு ஈண்டு ஒரு சில கூறுவாம். சரித்திர வல்லுநரில் ஒரு சாரார், பல்லவர், தற்போது நம் நாட்டில் உள்ள குறும்பரினத்தைச் சார்ந்தவரென்றும், மற்றொரு சாரார் கள்ளர் மரபினருடன் தொடர்புடையவரென்றுங் கருதுகின்றனர். வேளாண் மரபினருட் சிலரும், பள்ளி, படையாட்சிகள் என்போரும் இவ்வகுப்பினரே என்றும் பின்னுமொரு சாரார் பன்னுகின்றனர்.

தொண்டைமண்டலமே பல்லவர் ஆண்ட பகுதியாம். காஞ்சீபுரம் அவர்க்குத் தலைநகராக விளங்கியது. ஆறாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டுவரை பல்லவர் தென்னாட்டில் முழு வலிமை பெற்றிருந்தனர். இக்காலத்திற்கு முன்னிருந்த இந்நாட்டு வல்லரச மரபினரும் பல்லவர்க்கு அடங்கி நடந்தனர். பல்லவர் உயர் நிலை உற்றிருந்தபோது வடஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சை முதலிய ஜில்லாக்களில் அவர்களது ஆட்சி சிறந்திருந்தது.

இனிப் பல்லவர்களில் தலைசிறந்த சிலரைப்பற்றிச் சற்றே கூறுவாம். ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாண்ட ஸிம்மவிஷ்ணு பல்லவன் சேர சோழ பாண்டியரையும் வென்று இலங்கையைக் கைப்பற்றினான். இவன் காலத்தில் பைரவி எனப் பெயரிய சம்ஸ்க்ருதப் பெரும்புலவர் ஒருவர் விளங்கினார். இவன் மகன் மகேந்திர வர்மனுக்கும் (கி. பி. 600—625) சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசனுக்கும் போர் நேர்ந்தது. அப்போரில் கிருஷ்ணா நதிக்கும், கோதாவரி நதிக்கும் இடையிலிருந்த வெங்கிநாட்டைப் பல்லவரிடமிருந்து சாளுக்கியர் கைப்பற்றினர். எனினும் மகேந்திர வர்மன் புகழும் வீரமும் சிறிதும் குறைந்தில. இவன் காலத்திலிருந்துதான் பல்லவர் மேன்மை தென்னாடு முழுதும் திகழ்ந்து விளங்கத் தொடங்கியதெனலாம். இவனே திருச்சிராப்பள்ளி, பல்லாவரம்,

மாமண்டூர் முதலிய இடங்களில் பற்பல பாறைக் கோயில்களைச் செதுக்கி அவற்றில் தன்புகழ் எங்கும் விளங்கும் வண்ணம் தீட்டியுள்ளான். இவன் ஆர்க்காட்டிற்கும் அரக்கோணத்திற்கும் இடையில் இருந்த மகேந்திர வாடியைத் தன் பெயரால் அமைத்து அங்கொரு நீரணையை நிறுவினன் என்றும் கூறுப. இம்மா மன்னவனே முதலில் ஜைனனாக இருந்து பிறகு திருநாவுக்கரசு நாயனாரைப் பின்பற்றிச் சைவனாயினன் எனப் பெறுகின்றான்.

மகேந்திர வர்மனுக்குப் பின் நரஸிம்ம வர்மபல்லவன் சிறந்து விளங்கினான். இவனும் சேர சோழ பாண்டியர்பால், பன்முறை தன் கொற்றங் காட்டியுள்ளான். இவன் காலத்தில் யவஞ் ஸ்வாங என்னும் சீன யாத்திரிகர் காஞ்சீபுரத்திற்கு வந்து பல்லவ ராஜ்யத்தைப்பற்றி வெகு விரிவாக எழுதி இருக்கிறார். இவன் இராஜ்யத்தில் நிலங்கள் செம்மையாகப் பண்படுத்தப் பெற்றுச் செழிப்புற்றிருந்தனவென்றும், இவன் நாட்டினர், நிறைந்த தீர வீரமும், கல்வியில் ஊக்கமும், பிறர் நம்பத்தக்க தகுதியும் வாய்ந்தவர்களாக இருந்தனர் என்றும் அவர் எழுதியவற்றால் உணர்கின்றோம். நரஸிம்மவர்மன் 642-ம் ஆண்டில் மிக்க வீரத்துடன் சாளுக்கிய இராஜதானியாகிய வாதாபி நகரைக் கைப்பற்றி, எரியூட்டி இரண்டாம் புலிகேசனை இவ்வுலகைவிட்டோட்டினான். மிகவும் நேர்த்தியான கடற்படையொன்றை மகாபலிபுரத்தில் வைத்திருந்தான். இந்நகர் இவன் காலத்தில் தான் மகாமல்லபுரம் என்னும் பெயரால் அமைக்கப்பெற்றது. தற்போது அவ்வழகிய நகர் பாழடைந்தழிந்திருப்பினும் அதன் எஞ்சிய கற்கட்டடங்கள் வெகு விந்தையாகவே விளங்குகின்றன. அவற்றை இரதங்கள் என்ப. அவை ஒவ்வொன்றும் தனித்தனியே ஒவ்வொரு முழுக் கல்லால் செதுக்கப்பெற்றவை. ஆண்டுள்ள கல்வெட்டுக்கள் நேரிற் காணத்தக்கன. இவ்விரதங்களிற் சில கடலால் கொள்ளப்பெற்றன. எஞ்சியவை நம் அரசாங்கத்தாரால் பாதுகாக்கப் பெறுகின்றன. அவற்றைச் சுற்றிலுமுள்ள பாறைகளின்மீதும் பல கல்வெட்டுக்கள் உள. அவற்றுள் முக்கியமானது அர்ஜுனன் தவத்தை நன்கு விளக்குவதாகும்.

பல்லவர் காலத்தில் தமிழும் சம்ஸ்க்ருதமும் தழைத்தோங்கின. பல்லவரின் தலைமை ஒன்பதாம் நூற்றாண்டோடு முடிவடைந்தது. ஆதித்த சோழன் என்னும் தமிழ்வேந்தன் அபாரஜித்தன் என்னும் பல்லவ மன்னனைப் புறமுதுகிடும்படி தோற்கடித்து, தஞ்சை, திருச்சிரபுரம் முதலியவற்றைக் கைப்பற்றிக் கொண்டான் அதன்பின் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பல்லவர் என்னும் சொல்லே இல்லாமல் வேறு அரசியல் தொடங்கலாயிற்று.

220

அடுக்கிய இடுக்கன்.

திரு. ஆ. வா. தங்கவேல் முதலியார் என்னும் எம் அம்மான் சேய், ஆ. த. நரசிம்மன் என்பான், பத்தொன்பது வயதினன், நம் தமிழரண் பணிக்கென நம்பால் வந்திருந்தோன், பெற்றோர்க் கரு மருந்தன்ன ஒரே மகன், அன்பு அறிவொழுக்கங்களமைந்த விடலை, சின்னாள் உடல் நலியுற்று 21-1-41 உயன்று திடீரென மாரடைந்து வானடைந்தான். சென்ற சில மாதங்கட்கு முன்னால் எம்மாருயிரனைய இருமுதுகுரவரையும் ஒருமிக்க இழந்ததுயர் இன்னும் ஆறா நிலையில் இருக்கும் எமக்கு இது நேர்ந்தமை உகிர்ச் சுற்றின்மேல் உலக்கை விழுந்ததுபோலாம்.

மதிப்புரை.

நவசக்தி:—

புலத்துறை முற்றிய பெருநாவலர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் 20 ஆண்டுகளாக நடத்திவரும் நவசக்தி என்னும் வார வெளியீடு தற்போது திரு சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்களை ஆசிரியராகப் பெற்று, மாத வெளியீடாகி, கதை, கவிதை, விந்தை, விஞ்ஞானம் அரசியல், இலக்கியம், முதலிய எவ்வெத்துறையிலும் சிறந்து, அழகிய படங்களுடன் விளங்குகிறது.

ஆண்டுவரி உள்நாடு ரூ 2—0—0 வெளிநாடு ரூ. 2—8—0

1, சன்னதி வீதி மயிலாப்பூர், சென்னை.

புன்னகை விகடன்:—

ஆசிரியர் திரு. கே. நாராயணசாமி அவர்கள்.

ஒவ்வொரு மாதமும் 1, 15 தேதிகளில் இருமுறை வெளிவரும் ஒரு சிறந்த நகைச்சுவை வெளியீடு. உலக வாழ்க்கைத் துறைகளில் நேரும் அவலக் கவலைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது உவகையை முயன்றேனும் வருவித்து மகிழ்வோடிருத்தல் யாவர்க்கும் கடன். படிப்போர் வாய்வெடிக்க நகைக்கவும் முகமிளிர முறுவலிக்கவும் தக்க அரிய கட்டுரைகள் இக்கால முறைக்கேற்பப் பல துறைகளிலும் கொண்டு விளங்கும் நம் புன்னகை விகடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத தோழனுவான்.

ஆண்டுவரி உள்நாடு ரூ. 1—12—0

பர்மா ரூ. 2—8—0 வெளிநாடு ரூ 3—8—0

124, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. சென்னை.